**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**
**முன்னிலை: திருமதி.N.ஷர்மிளா, B.A.,B.L.,**
**சார்பு நீதிபதி, சத்தியமங்கலம்**

2024-ம் ஆண்டு மார்ச் திங்கள் 11-ம் நாள் திங்கள்கிழமை
(2054 திருவள்ளுவராண்டு ஸ்ரீ சோபகிருது வருடம் மாசித்திங்கள் 28-ம் நாள்)

I.A.No.3/2023
in
O.S.No.31/2015

தர்மராஜன் ... மனுதாரர்/ 2-ம் பிரதிவாதி

/எதிர்/

P கதிரேசன் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது 30.01.2024 தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.K.தங்கராஜன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.S.இராஜாமணி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பில் கேட்கப்பட்டு, வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இது நாள் வரையில் இந்த நீதிமன்ற ஆய்விலிருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**<u>உத்தரவு</u>**

இந்த மனுவானது, மனுதாரர் தரப்பில் ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்ய தாக்கல் செய்ய சிபிசி ஆணை 9 விதி 7-ன்படி மனு தாக்கல் செய்ய ஏற்பட்ட 3020 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொண்டு தகுந்த உத்தரவு பிறப்பிக்க வேண்டி காலவரையறைச்சட்டம் பிரிவு 5-ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்</u>:-

இந்த மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 2-ம் பிரதிவாதி ஆவார். எதிர்மனுதாரர் இந்த மனுதாரருக்கு எதிராக ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி வழக்கு தாக்கல்

செய்துள்ளார். மேற்படி வழக்கில் கடந்த 02.06.2015-ம் தேதியன்று மேதகு நீதிமன்றம் மூலம் சார்வு செய்யப்பட்டு, மனுதாரர் ஆஜராக வேண்டி வாய்தா போடப்பட்டிருந்தது. மேற்படி மேதகு நீதிமன்ற சம்மன் கிடைக்கப்பெற்ற பின்பு மனுதாரர் எதிர்மனுதாரரை சந்தித்து வழக்கு தாக்கல் செய்துள்ளது பற்றியும் நீதிமன்றத்தில் ஆஜராவது பற்றியும் கேட்டபோது எதிர்மனுதாரர் மனுதாரர் பெற்ற ரூ.2,25,000/-க்கு மனுதாரர் வட்டி செலுத்தி வருகிறார் என்றும், கடனுக்காக எழுதிக் கொடுக்கப்பட்ட கிரைய உடன்படிக்கை ஆவணம் காலக்கெடு முடிவடைவதால் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் தொகையான ரூ.2,25,000/-னையும் வட்டியையும் செலுத்திவிட்டால், மேற்படி வழக்கினை வாபஸ் பெற்றுக்கொள்வதாகவும், கிரைய உடன்படிக்கை காலம் முடிவடைந்து விட்டதால் எதிர்மனுதாரர் தரப்பு ஆதரவிற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், அதனால் மனுதாரரை நீதிமன்றத்திற்கு வந்து ஆஜராக வேண்டாம் என்று கூறியதால் மனுதாரர் மேற்படி தேதியில் மேதகு நீதிமன்றத்தில் ஆஜராகாததால் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு விட்டது. மனுதாரர் வேண்டுமென்றோ, அஜாக்கிரதையாகவவோ இருக்கவில்லை. எதிர்மனுதாரர் மேதகு நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டாம் எனக் கூறியதால் தான் மேற்படி செயல் நிகழ்ந்துள்ளது. மேற்படி வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டும் மனுதாரர் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும், மேற்படி ரூ.2,25,000/-க்கு மாதம் ரூ.2,250/- வீதம் செலுத்தி வந்தார். இந்நிலையில் 2023-ம் வருடம் செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் எதிர்மனுதாரரை சந்தித்து அசல் தொகையான ரூ.2,25,000/-னை பெற்றுக்கொண்டு மேற்படி வழக்கினை வாபஸ் பெற்றுக்கொள்ளுமாறு மனுதாரர் கேட்டார். அதற்கு எதிர்மனுதாரர் கிரைய உடன்படிக்கை முடிந்த தேதியிலேயே மேற்படி பணத்தை கொடுத்திருந்தால் வழக்கை வாபஸ் பெற்றிருப்பார் என்றும், வழக்கு தாக்கல் செய்து நிறைய செலவு ஆகிவிட்டது என்றும் அதனால் சொத்தினை கிரையம் செய்து கொடுக்க வேண்டும் என்றும் கூறினார். மனுதாரர் கடனுக்கு தான் தாவா சொத்தினை கிரைய உடன்படிக்கை செய்து கொடுத்தார் என்றும், கடனுக்கு

ஆதரவாகத்தான் எதிர்மனுதாரர் கேட்டதால்தான் தாவா சொத்தினை கிரைய உடன்படிக்கை செய்து கொடுத்தார் என்றும், கடன் தொகை பெற்றுக்கொண்டு வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டதற்கு எதிர்மனுதாரர் மறுத்துவிட்டார். மனுதாரர் கடனுக்கு ஆதரவாகத்தான் கிரைய உடன்படிக்கை எழுதிக்கொடுத்தார். அச்சமயத்தில் எதிர்மனுதாரர் அவரது பெயரில் கிரைய உடன்படிக்கை பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும் என்றும், அவரது தாயார் பெயரில் உடன்படிக்கை சொத்தினைஜெனரல் பவர் பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும் என்றும், அவ்வாறு இருந்தால் தான் கடன் கொடுப்பேன் என்று கூறியதால் எதிர்மனுதாரர் மீது இருந்த நம்பிக்கையின் அடிப்படையில் 19.10.2012-ம் தேதியில் கிரைய உடன்படிக்கை சத்தியமங்கலம் சார்பதிவக ஆவண எண்.5237/2012 ஆகவும், கடந்த 19.10.2012-ம் தேதியிலேயே ஜெனரல் பவர் பத்திரம் ஆவண எண்.490BK4 ஆகவும் பதிவு செய்து கொடுத்து கடன் பெற்றார். தற்சமயம் ஜெனரல் பவர் பத்திரத்தை எல்லாம் மறைத்து தாவா தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் கூறியபடி கடனையும், கடனுக்குண்டான வட்டியை செலுத்தியதை பெற்றுவிட்டு தற்சமயம் கடனை திருப்பிக் கொடுத்தால் வாங்காமல் மறுத்தும், சொத்தை அநியாய லாபம் அடையும் நோக்கில் கடனை திருப்பிப் பெற்றுக் கொள்ளாமல் தாவா சொத்தினை அநியாய லாபம் கருதி அடைய நினைத்து வழக்கினை எதிர்மனுதாரர் சொன்னபடி திரும்ப பெற மறுக்கிறார். கிரைய உடன்படிக்கை சொத்து கிரைய உடன்படிக்கைக் காலத்திலேயே 30 லட்சத்திற்கு மேல் சந்தை மதிப்பு போகக்கூடியதாகும். அவ்வாறான சூழ்நிலையில் ரூ.2,50,000/-க்கு கிரையம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. எதிர்மனுதாரர் மீது இருந்த நம்பிக்கையின் அடிப்படையில் பெற்ற கடனுக்கு ஆதரவாக தாவா கிரைய உடன்படிக்கை எற்படுத்தப்பட்டது. அதனை வைத்து எதிர்மனுதாரர் நம்பிக்கை மோசடியாக தாவா வழக்கு தாக்கல் செய்தும், மனுதாரரை வேண்டுமென்றே நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டாம் எனக்கூறியும் தற்போது வரை மேற்படி ரூ.2,25,000/-க்கு வட்டி பெற்று வந்தும், மேற்படி அசல் தொகையினை பெற்றுக்கொண்டு வழக்கினை வாபஸ் பெறக் கேட்டும்

எதிர்மனுதாரர் மறுத்ததால் மனுதாரர் வேறு வழியின்றி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

## <u>3. 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்மனு உரை:</u>

எதிர்மனுதாரர் தரப்பில், தாக்கல் செய்துள்ள எதிர் மனுவுரையில், இந்த மனு பொய்யானதும், மோசடியானதும் ஆகும். சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கக் கூடியது அல்ல என்றும், எதிர்மனுதாரர் உண்மையென்று ஒப்புக்கொள்ளும் சங்கதிகள் தவிர ஏனைய பிற சங்கதிகளை மனுதாரர்களே உண்மையென்று நிரூபிக்க வேண்டுமென்றும், மனுதாரர் மனுவின் பிரமாணப்பத்திரிக்கையில், 02.06.2015-ம் தேதியன்று சமூகம் நீதிமன்றம் மூலம் அழைப்பாணை பெற்றுக்கொண்டு, ஆஜராக வேண்டி வாய்தா போடப்பட்டுள்ளது என்பதும், மேற்படி இந்த எதிர்மனுதாரரை சந்தித்து நீதிமன்றத்தில் ஆஜராவது பற்றி கேட்டதாகவும், அதற்கு இந்த எதிர்மனுதாரர் மனுதாரரும், அவரது குடும்பத்தாரும் பெற்ற ரூ.2,25,000/-க்கு வட்டி செலுத்தி வருகிறீர்கள் என்பதும், கடனுக்காக எழுதப்பட்ட கிரைய உடன்படிக்கை ஆவணம் காலக்கெடு முடிவடைவதால் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் தொகையான ரூ.2,25,000/-யும் வட்டியும் செலுத்திவிட்டால் வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்வதாகவும், கிரைய உடன்படிக்கை காலம் முடிவடைந்துவிட்டதால், ஆதரவுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், அதனால் மனுதாரரை நீதிமன்றத்திற்கு ஆஜராக வேண்டாம் என்று கூறினார் என்பதும், அதனால் தான் மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்பதும், மேலும் கிரைய உடன்படிக்கை தொகையான ரூ.2,25,000/-க்கு மாதம் ரூ.2,250/- வீதம் வட்டி எதிர்மனுதாரருக்கு இந்த மனுதாரர் வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு ஒவ்வொரு மாதமும் செலுத்தி வந்தார் என்பதும், 2023-ம் வருடம் செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் எதிர்மனுதாரரை சந்தித்து அசல் தொகை ரூ.2,25,000/-த்தினை பெற்றுக்கொண்டு வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டார் என்பதும், அதற்கு இந்த எதிர்மனுதாரர் கிரைய உடன்படிக்கை முடிந்த தேதியிலேயே மேற்படி பணத்தை கொடுத்தால் வழக்கை வாபஸ்

பெற்றிருப்பேன் என்பதும் வழக்கு தாக்கல் செய்து நிறைய செலவுகள் ஆகிவிட்டது என்பதும், அதனால் சொத்தை கிரையம் செய்து கொடுக்க வேண்டும் என்று கூறியதாகவும், கடனுக்கு தான் தாவா சொத்தினை கிரைய உடன்படிக்கை செய்து கொடுத்தேன் என்பதும், அதற்கு இந்த எதிர்மனுதாரர் மறுத்துவிட்டார் என்பதும், இந்த எதிர்மனுதாரருக்கு கடனையும், மேற்படி கடனுக்கு உண்டான வட்டியையும் செலுத்தியதை பெற்று, தற்சமயம் கடனை திருப்பிக் கொடுத்தால் வாங்காமல் மறுத்தும், சொத்தை அதிக லாபம் அடையும் நோக்கில் கடனை திருப்பி பெற்றுக்கொள்ளாமல், தாவா சொத்தினை அதிக லாபம் கருதி அடைய நினைத்து வழக்கினை இந்த எதிர்மனுதாரர் திரும்ப பெற மறுத்து வருகிறார் என்பதும், தாவா சொத்து கிரைய உடன்படிக்கை காலத்திலேயே 30 லட்சத்திற்கு மேல் போகக்கூடியதாகும் என்பதும் பொய்யான சங்கதிகள் ஆகும். மனுதாரர் அசல் வழக்கில் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பி அதனை பெற்றுக்கொண்டு, ஆஜராகி வழக்கை நடத்த முன் வராமல் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு எதிர்மனுதாரர் நிறைவேற்று மனு தாக்கல் செய்து, அதிலும் நீதிமன்ற அறிவிப்பை பெற்றுக்கொண்ட பின்னரும் மனுதாரர் வேண்டுமென்றே கெட்ட உள் நோக்கத்துடன் வழக்கை நடத்த முன்வராமல் சுமார் 10 ஆண்டு காலம் வீண் காலதாமதம் செய்து, தற்பொழுது பொய்யான சங்கதிகளை சொல்லி இம்மனுவை தாக்கல் செய்திருப்பதும் ஏற்க கூடியதும், நிலைக்க கூடியதும் அல்ல. மேதகு நீதிமன்றம் நேர்மை நோக்கில் பிறப்பிக்கும் உத்திரவை மனுதாரர் பெற தகுதியற்றவர். இந்த எதிர்மனுதாரர் நீதியை பெற நீண்ட தூர காலமாக வழக்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். அதனை தடுக்கும் விதமாக மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது ஏற்புடையது அல்ல. மேலும் இம்மனுவை அனுமதிப்பது என்பது நீதியின் நலனுக்கு உகந்ததல்ல. இந்த மனுதாரர் தாயாரும், சகோதரியும், வழக்கின் தரப்பினர்கள் அனைவரும், மனுதாரரும் ஒரே வீட்டில் தான் வசித்து வருகின்றார்கள். மேற்படி அவர்களும் வழக்கை நடத்த முன் வராமல் தோன்றாத் தரப்பினர்களாக அறிவிக்கப்பட்டு, பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்திரவை ரத்து செய்ய காலதாமதத்துடன் மனு தாக்கல்

செய்யப்பட்டு, செலவு தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, பின்பு அதனை பொறுத்து இந்த எதிர்மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்து, அதில் ரூ.6,000/-ம் செலவு தொகை செலுத்த வேண்டுமென்றும், வழக்கை 9 மாத காலக்கெடுவிற்குள் முடிக்க வேண்டும் என்றும், நிபந்தனையுடன் உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. தற்பொழுது மேலும் வழக்கை காலதாமதப்படுத்தும் நோக்கத்துடன் இந்த மனுதாரர் இம்மனுவை அவரின் தாயார் மற்றும் சகோதரியுடன் வஞ்சக கூட்டு வைத்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளளார். இந்த மனுதாரரின் தாயார், சகோதரியும் ஒருதலைபட்ச உத்திரவை ரத்து செய்ய வேண்டி தாக்கல் செய்துள்ள பிரமாணப்பத்திரிக்கையில் வைரஸ் காய்ச்சல் எற்பட்டு, அதனால் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ளார். அசல் வழக்கில் பிரதிவாதிகள் ஒவ்வொரு தரப்பினரும்,முன்னுக்கு பின் முரணான சங்கதிகளை தவணை முறையில் தனித்தனியாக ஒவ்வொருவரும் வேறு வேறு காரணங்களை கூறி காலதாமத மனுவை ஏற்றுக்கொள்ளும்படி தாக்கல் செய்திருப்பது ஏற்கக் கூடியதல்ல. எனவே இந்த மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. **<u>தற்போது இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில்:</u>**

இம்மனு அனுமதிக்கப்பட வேண்டியதா? இல்லையா என்பதே ஆகும்?

5. இந்த மனு விசாரணையின் போது சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>6. தீர்வு:-</u>**

6.1 மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் வாதிடுகையில், வழக்கில் கடந்த 02.06.2015-ம் தேதியன்று மேதகு நீதிமன்றம் மூலம் சார்வு செய்யப்பட்டு, மனுதாரர் ஆஜராக வேண்டி வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், மேற்படி மேதகு நீதிமன்ற சம்மன் கிடைக்கப்பெற்ற பின்பு மனுதாரர் எதிர்மனுதாரரை சந்தித்து வழக்கு தாக்கல் செய்துள்ளது பற்றியும்

நீதிமன்றத்தில் ஆஜராவது பற்றியும் கேட்டபோது எதிர்மனுதாரர் மனுதாரர் பெற்ற ரூ.2,25,000/-க்கு மனுதாரர் வட்டி செலுத்தி வருகிறார் என்றும், கடனுக்காக எழுதிக் கொடுக்கப்பட்ட கிரைய உடன்படிக்கை ஆவணம் காலக்கெடு முடிவடைவதால் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் தொகையான ரூ.2,25,000/-னையும் வட்டியையும் செலுத்திவிட்டால், மேற்படி வழக்கினை வாபஸ் பெற்றுக்கொள்வதாகவும், கிரைய உடன்படிக்கை காலம் முடிவடைந்து விட்டதால் எதிர்மனுதாரர் தரப்பு ஆதரவிற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், அதனால் மனுதாரரை நீதிமன்றத்திற்கு வந்து ஆஜராக வேண்டாம் என்று கூறியதால் மனுதாரர் மேற்படி தேதியில் மேதகு நீதிமன்றத்தில் ஆஜராகாததால் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு விட்டது என்றும், மனுதாரர் வேண்டுமென்றோ, அஜாக்கிரதையாகவவோ இருக்கவில்லை என்றும், எதிர்மனுதாரர் மேதகு நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டாம் எனக் கூறியதால் தான் மேற்படி செயல் நிகழ்ந்துள்ளது என்றும் வாதிட்டார்.

6.2. எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிடுகையில், மனுதாரர் அசல் வழக்கில் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பி அதனை பெற்றுக்கொண்டு, ஆஜராகி வழக்கை நடத்த முன் வராமல் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு எதிர்மனுதாரர் நிறைவேற்று மனு தாக்கல் செய்து, அதிலும் நீதிமன்ற அறிவிப்பை பெற்றுக்கொண்ட பின்னரும் மனுதாரர் வேண்டுமென்றே கெட்ட உள் நோக்கத்துடன் வழக்கை நடத்த முன்வராமல் சுமார் 10 ஆண்டு காலம் வீண் காலதாமதம் செய்து, தற்பொழுது பொய்யான சங்கதிகளை சொல்லி இம்மனுவை தாக்கல் செய்திருப்பதும் ஏற்க கூடியதும், நிலைக்க கூடியதும் அல்ல என்றும், இந்த மனுதாரர் தாயாரும், சகோதரியும், வழக்கின் தரப்பினர்கள் அனைவரும், மனுதாரரும் ஒரே வீட்டில் தான் வசித்து வருகின்றார்கள் என்றும், மேற்படி அவர்களும் வழக்கை நடத்த முன் வராமல் தோன்றாத் தரப்பினர்களாக அறிவிக்கப்பட்டு, பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்திரவை ரத்து செய்ய காலதாமதத்துடன் மனு தாக்கல் செய்யப்பட்டு, செலவு தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, பின்பு அதனை பொறுத்து இந்த

எதிர்மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்து, அதில் ரூ.6,000/-ம் செலவு தொகை செலுத்த வேண்டுமென்றும், வழக்கை 9 மாத காலக்கெடுவிற்குள் முடிக்க வேண்டும் என்றும், நிபந்தனையுடன் உத்திரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், தற்பொழுது மேலும் வழக்கை காலதாமதப்படுத்தும் நோக்கத்துடன் இந்த மனுதாரர் இம்மனுவை அவரின் தாயார் மற்றும் சகோதரியுடன் வஞ்சக கூட்டு வைத்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளளார் என்றும், இந்த மனுதாரரின் தாயார், சகோதரியும் ஒருதலைபட்ச உத்திரவை ரத்து செய்ய வேண்டி தாக்கல் செய்துள்ள பிரமாணப்பத்திரிக்கையில் வைரஸ் காய்ச்சல் எற்பட்டு, அதனால் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ளார் என்றும், அசல் வழக்கில் பிரதிவாதிகள் ஒவ்வொரு தரப்பினரும், முன்னுக்கு பின் முரணான சங்கதிகளை தவணை முறையில் தனித்தனியாக ஒவ்வொருவரும் வேறு வேறு காரணங்களை கூறி காலதாமத மனுவை ஏற்றுக்கொள்ளும்படி தாக்கல் செய்திருப்பது ஏற்கக் கூடியதல்ல என்றும் வாதிட்டார்.

6.3. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் கோரி எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் அசல் தொகையான ரூ.2,25,000/-யையும் வட்டியையும் மனுதாரர் செலுத்திவிட்டதால் எதிர்மனுதாரர் வழக்கினை வாபஸ் பெற்றுக் கொள்வதாகவும் கிரைய உடன்படிக்கை காலம் முடிந்து விட்டதால் எதிர்மனுதாரர் தரப்பு ஆதரவுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், அதனால் மனுதாரரை எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டாம் என்று கூறியதால் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

6.4. எதிர்மனுதாரருக்கு மனுதாரர் அசல் தொகையாக ரூ.2,25,000/-ம் அதற்கான வட்டியும் செலுத்தி விட்டாரா இல்லையா என்பதை அசல் வழக்கில்தான் முடிவு செய்ய இயலும். இந்த மனுவில் முடிவு செய்ய இயலாது. மேலும், எதிர்மனுதாரர் ஜெனரல் பவர்

பத்திரத்தை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளாரா என்பதையும் அசல் வழக்கில்தான் முடிவு செய்ய இயலும். இந்த வழக்கானது மனுதாரர் மற்றும் மனுதாரரின் தாயார்மனுதாரரின் சகோதரி ஆகியோர் மீது தாக்கல் செய்யப்பட்டிருந்தது. மனுதாரரின் தாயாரும் மனுதாரரின் சகோதரியும் வழக்கை நடத்த முன் வராமல் தோன்றா தரப்பினராக அறிவிக்கப்பட்டு பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்திரவை ரத்து செய்ய காலதாமதத்துடன் மனு தாக்கல செய்திருந்தனர். பின்பு அந்த மனு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டது. பின்பு அதனை பொறுத்து எதிர்மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு CRP.No.2844/2019 and CMP.No.186/2019 தாக்கல் செய்து அதில் ரூ.6,000/- செலவுத் தொகை செலுத்த வேண்டும் என்றும், வழக்கை 9 மாத காலகெடுவிற்குள் முடிக்க வேண்டும் என்ற நிபந்தையுடன் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

6.5. இந்த மனு பொய்யானது என்று எதிர் மனுதாரர் தரப்பில் வாதங்கள் முன் வைத்திருந்தாலும், அசல் வழக்கானது ஏற்றுகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த வழக்கு உபயவாதிகளுக்கிடையயே ஒரு முழுமையான தீர்வு ஏற்பட மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு வழங்குவது அவசியம் என்பதாலும், இருதரப்பு விசாரணைக்குப் பிறகு, வழக்கில் முறையான தீர்ப்பு வழங்க வேண்டும் என்பதினாலும் இந்த மனுவை செலவுத் தொகையுடன் அனுமதிக்கலாமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9. முடிவாக, இந்த மனு செலவுதொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. இந்த மனுதாரர்கள், எதிர்மனுதாரருக்கு செலவுதொகையாக ரூ.3,000/-ஐ 14.03.2024-க்குள் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க 15.03.2024.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து

பிழைத்திருத்தங்கள் செய்யப்பட்டு 2024-ம் ஆண்டு மார்ச் திங்கள் 11-ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N SHARMILA Digitally signed by N SHARMILA Date: 2024.10.24 16:43:47 +0530

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.

<u>மனுதாரர் மற்றும்  எதிர்மனுதாரர் தரப்பு</u>
<u>சாட்சிய மற்றும் சான்றாவணங்கள்:-</u> -இல்லை-

N SHARMILA Digitally signed by N SHARMILA Date: 2024.10.24 16:43:54 +0530

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.